IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.251/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | THUFELA PARVEEN |
| HUSBAND'S NAME | : | ASLAM BASHA |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of January 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பேர்ணாம்பட்டில் உள்ள எனது அம்மாவின் வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் கடந்த 2014 ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எதிரி அவரது குடும்பத்தாரின் பேச்சை கேட்டுக்கொண்டு என்னை கொடுமை செய்தார். அவர் வீட்டு பக்கத்தில் உள்ள பெண்ணுடன் தொடர்பில் இருந்து வருகிறார். அதனை கேட்டதால் என்னை அடித்து கொடுமை செய்து வந்தார். எனவே நான் எனது அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன். பின்னர் ஜமாத் மூலமாக எங்களை சேர்த்து வைத்தார்கள். இப்போது எனக்கு ஒரு ஆண் மகன் 7 வயதில் உள்ளார். நான் எனது மகனை அழைத்து கொண்டு 7 வருடங்களுக்கு முன்பு எனது அம்மாவீட்டிற்கு வந்துவிட்டேன். எதிரி தற்போதும், என்னையும், எனது மகனையும் அசிங்கமாக பேசி மிரட்டி வருகிறார். இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

S/d–J.Jayganesh.,B.Tech.,B.L.,
Judicial Magistrate(FAC),
Gudiyatham.